முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கூடலூர்

முன்னிலை – திரு. R.சசின்குமார், B.I.S.M., B.L.,

முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்

(2054–திருவள்ளுவராண்டு, சோபகிருது வருடம், ஐப்பசி திங்கள் 20–ம் நாள்)

2023–ம் ஆண்டு, நவம்பர் மாதம் 6.ம் நாள் திங்கள்கிழமை

**CC.No. 65/2023**

**CNR.No.TNNS07-001455-2023**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | மாநில அரசு<br>காவல் உதவி ஆய்வாளர் மூலமாக<br>கூடலூர் காவல் நிலையம்,<br>நீலகிரி மாவட்டம்.<br>குற்ற எண்.263/2023. |
| குற்றம் சாட்டப்பட்டவர் | – | திரு. ஜிம்மி ஜோசப், வயது 49/2023,<br>த/பெ. ஜோசப்,<br>செம்பகச்சேரி, எலஞ்சீன், புள்ளிப்பாடம்,<br>மலப்புரம், கேரளா. |
| வனையப்பட்ட குற்றங்கள் | – | U/s.341, 294(b), 387 and 506(ii) of IPC |
| குற்றம் நிகழ்ந்த நாள் | – | 12.07.2023 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 12.07.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | – | 12.07.2023 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | இல்லை |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 04.09.2023 |

| | | |
|---|---|---|
| குவிமுச.பிரிவு.240–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 22.09.2023 |
| சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாட்கள் | – | சாட்சிகள் / முதல் விசாரணை செய்யப்பட்ட நாள் / குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்:<br>அ.சா.1 – 03.10.2023 – 03.10.2023<br>அ.சா.2 – 10.10.2023 – 10.10.2023<br>அ.சா.3 – 10.10.2023 – 10.10.2023 |
| குவிமுச.பிரிவு.311–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | – | 1. கு.வி.மு.ச பிரிவு 311.ன் கீழ் Cr.M.P.No. /2023 என மனுதாக்கல் செய்யப்பட்டு 10.10.2023 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>2. கு.வி.மு.ச பிரிவு 320(2).ன் கீழ் Cr.M.P.No.5761/2023 என மனுதாக்கல் செய்யப்பட்டு 03.10.2023 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. |
| குவிமுச.பிரிவு.313(1)(b)–இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 10.10.2023 |
| தலைமறைவு எதிரி குறித்த விவரம் | – | எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | – | இல்லை |
| தீர்மானம் | – | எதிரி குற்றவாளி இல்லை |

| | | |
|---|---|---|
| முடிவு | | இறுதியாக,<br>(i) எதிரி இ.த.ச. பிரிவு 341–ன் கீழான குற்றச்சாட்டில் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும்,<br>(ii) எதிரி இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழான குற்றச்சாட்டில் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும்,<br>(iii) எதிரி இ.த.ச. பிரிவு 387–ன் கீழான குற்றச்சாட்டில் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும்,<br>(iii) எதிரி இ.த.ச. பிரிவு 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டில் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும், கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் குற்றம் புலன் கொள்ளப்பட்டு, 05.09.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த உதவி அரசு வழக்கறிஞர் நிலை–1, திரு. S. அருண்பாண்டியன், அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.ஸ்ரீஜேஸ், அவர்களும் முன்னிலையாகி இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து இறுதியாக கடந்த 10.10.2023 அன்று என் முன்பாக விசாரணைக்கு வந்ததில் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

1) குற்றமுறையீட்டாளர் தரப்பில், கடந்த 12.07.2023 அன்று மாலை சுமார் 17.00 மணியளவில் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் – நிசாத் கூடலூர் தேவர்சோலை சாலையில் நிகழ்நிலை புகார்தாரர் தனக்குச் சொந்தமான TN 43X 0621 பதிவெண்ணிட்ட ஆட்டோவில் வந்து கொண்டிருந்தபோது எதிரி நிகழ்நிலை புகார்தாரரின் ஆட்டோவை சட்டவிரோதமாக வழிமறித்து நிறுத்தி ஆட்டோவில் அருகில் வந்து நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து "பைசா எடுக்குடா பூரி மகனே" என்று கெட்டவார்த்தையில் திட்டியும், நிகழ்நிலை புகார்தாரரை எதிரி பேப்பர் வெட்டும் கத்தியை காட்டி "உன் பாக்கெட்டில் இருக்கிற பணத்தை ஒழுங்கா எடுடா இல்லைனா இங்கேயே இந்த கத்தியால உன் கழுத்தை அறுத்துருவேன்" என்று மிரட்டி நிகழ்நிலை புகார்தாரரின் பாக்கெட்டில் இருந்த பணம் ரூபாய் 550/–யை எடுத்தும், எதிரி நிகழ்நிலை புகார்தாரரை பார்த்து "இது பற்றி போலீசிடம் சொன்னால் உன் கொன்றுவிடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளதுமான எதிரி ஜிம்மி ஜோசப்பின் செய்கையானது இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 324, 387 மற்றும் 506(ii).ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் எனவும் கு.வி.மு.ச பிரிவு 173(2)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) குற்றம் புலன் கொள்ளல்:–**

இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரி – ஜிம்மி ஜோசப் மீது இ.த.ச பிரிவுகள் இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 324, 387 மற்றும் 506(ii).ன் கீழ் குற்றங்கள் இந்நீதிமன்றத்தால் கு.வி.மு.ச. பிரிவு 190(1)(b)–ன் கீழ் புலன் கொள்ளப்பட்டு வழக்கு கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தொடர்ச்சியாக எதிரிக்கு நீதிமன்றத்தில் முன்னிலையாக கு.வி.மு.ச. 204(1)(a)–ன் கீழ் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது.

**3). எதிரிக்கு நகல் வழங்கல் மற்றும் முதல் நிலை விசாரணை:–**

அழைப்பாணையின் பேரில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு. 207.ன் கீழ் எவ்வித தாமதமுமின்றி இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிக்கு வழக்கு விவரங்கள் தெரிந்து கொள்ள வழக்காவண நகல்கள் வழங்கப்பட்டு போதிய அவகாசம் கொடுத்த பின்னர் கு.வி.மு.ச. பிரிவு. 281–ன் கீழ் வழக்கு சாராம்சங்கள் குறித்தும் விளக்கி வினவ கேட்டதில் எதிரி குற்றவாளி இல்லையென மறுத்துரைத்தார்.

**4) குற்றச்சாட்டு வனைதல்:–**

இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்ததில் எதிரி குற்றம் புரிந்ததற்கான போதிய காரணங்கள் உள்ளதாக

தோன்றியதால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 324, 387 மற்றும் 506(ii).ன் குற்றங்களுக்கு கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன. எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அவருக்கு கு.வி.மு.ச. பிரிவு 240(2)–ன் கீழ் படித்து காண்பித்து விளக்கி வினவி கேட்கப்பட்டது.

## <u>5. எதிரியின் வாதம்:–</u>

எதிரி தன் மீதான குற்றச்சாட்டுகளுக்கு "**குற்றவாளி இல்லை**" என மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டு அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் சார்வு செய்யப்பட்டன.

இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1. முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1. முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்று பொருள்களும் குறியீடு செய்யப்பட்டன. பின்னிட்டு அரசு தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டன.

## 7) <u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சாரம்சம் பின்வருமாறு:–</u>

7.1) அ.சா.1. திரு. நிஷாத் இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட/காயம்பட்ட நபரும் இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரும் ஆவார். அ.சா.1 ஆட்டோ

டிரைவர் தொழில் செய்து வருகிறார். அ.சா.2 திரு. ராஜேஷ்குமார் கூடலூர் II கிராமத்தின் கிராம நிர்வாக அலுவர் ஆவார். கடந்த 12.07.2023 அன்று அ.சா.1 பாடந்தொரைக்கு சவாரி சென்றிருந்தபோது தான் வைத்திருந்த ரூ.550/— காணாமல் போயுள்ளது. அதுகுறித்து அ.சா.1 கூடலூர் காவல் நிலையத்தில் அ.சா.ஆ.1 புகார் கொடுத்துள்ளார்.

7.2) அ.சா.3 திருமதி. உதயகுமாரி கூடலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளரும் இவ்வழக்கில் கூடுதலாக சேர்க்கப்பட்ட சாட்சியும் ஆவார். கடந்த 12.07.2023 அன்று மாலை 17.30 மணியளவில் கூடலூர் காவல் நிலைய தலைமை காவலர் நசிரூதீன் என்பவர் கூடலூர் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது அன்றைய தினம் அ.சா.1 நிஷாத் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.5 எழுத்து மூல புகாரை பெற்றுக்கொண்டு அதன் தன்மைக்கேற்ப கூடலூர் காவல் நிலைய குற்ற எண்.263/2023, என இ.த.ச. பிரிவு 341, 294(b), 387, 506(ii) — ன் கீழ் அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். தொடர்ச்சியாக காவல் ஆய்வாளர் ஷாகுல் ஹமீது அவர்கள் வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 18.15 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சையது அலவி மற்றும் ஞானராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.7 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேலும், விசாரணை அதிகாரி சாட்சிகள் அ.சா.1 நிஷாத், சையது அலவி, ஞானராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்துள்ளார். தொடர்ச்சியாக இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை தேடிவந்ததில் அன்றைய தினம் 20.00 மணியளவில் எதிரி ஜிம்மி ஜோசப்பை கூடலூர் பஸ் நிலையம் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரித்ததில் எதிரி தாமாக முன்வந்து சாட்சிகள் அ.சா.2 ராஜேஷ்குமார் மற்றும் ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதியின் பேரில் காவல் ஆய்வாளர் அ.சா.பொ.1 இரும்பு கத்தி மற்றும் அ.சா.பொ.2 பணம் ரூ.550/- ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். மேலும், விசாரணை அதிகாரி சாட்சிகள் அ.சா.2 ரஜேஷ்குமார், ரமேஷ், குமார், சிறப்பு உதவி ஆய்வாளர் இப்ராஹிம், தலைமை காவலர் நசிரூதீன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அ.சா.1 நிஷாத்திடம் மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கைது செய்யப்பட்ட எதிரி மற்றும் தடய சொத்துக்களை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு நடுவர் முன்பு ஆஜர்படுத்தியுள்ளார். மேலும், கைப்பற்றப்பட்ட அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 தடய சொத்துக்களை அ.சா.ஆ.10 படிவம் - 91 தயார் செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்து P.R.No.153/2023 பெற்றுள்ளார். தொடர்ச்சியாக விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் ஷாகுல் ஹமீது அவர்கள் புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதாக அரசு தரப்பு வழக்கில் அமைந்துள்ளது.

**8) எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு.313(1)(b)ன் கீழ் வினவல்:–**

அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1. முதல் அ.சா.3 சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதி குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313 (1)(b)–ன் கீழ் விளக்கி வினவிய போது அதனை எதிரி மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என எடுத்துரைக்கப்பட்டு எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**9) தீர்வுக்குரிய பிரச்சினை:–**

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகளாவன:**

**i) எதிரி–ஜிம்மி ஜோசப் மீதான இதச பிரிவு 341.ன் கீழான குற்றச்சாட்டும்,**

**ii) எதிரி–ஜிம்மி ஜோசப் மீதான இதச பிரிவு 294(b).ன் கீழான குற்றச்சாட்டும்,**

**iii) எதிரி–ஜிம்மி ஜோசப் மீதான இதச பிரிவு 387.ன் கீழான குற்றச்சாட்டும்,**

**iv) எதிரி–ஜிம்மி ஜோசப் மீதான இதச பிரிவு 506(ii).ன் கீழான குற்றச்சாட்டும்**

**அரசு தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

10. இவ்வழக்கில், எதிரி ஜிம்மி ஜோசப் மீது, கடந்த 12.07.2023 அன்று மாலை சுமார் 17.00 மணியளவில் அ.சா.1 கூடலூர் தேவர்சோலை சாலையில் அ.சா.1.க்கு சொந்தமான TN 43X 0621 பதிவெண்ணிட்ட ஆட்டோவில் வந்து கொண்டிருந்தபோது எதிரி அ.சா.1.ன் ஆட்டோவை சட்டவிரோதமாக வழிமறித்து நிறுத்தி ஆட்டோவின் அருகில் வந்து அ.சா.1 ஐ பார்த்து "பைசா எடுக்குடா பூரி மகனே" என்று கெட்டவார்த்தையில் திட்டியும், எதிரி அ.சா.1 ஐ பேப்பர் வெட்டும் கத்தியை காட்டி "உன் பாக்கெட்டில் இருக்கிற பணத்தை ஒழுங்கா எடுடா இல்லைனா இங்கேயே இந்த கத்தியால உன் கழுத்தை அறுத்துருவேன்" என்று மிரட்டி அ.சா.1.ன் பாக்கெட்டில் இருந்த பணம் ரூபாய் 550/-யை எடுத்தும், எதிரி அ.சா.1 ஐ பார்த்து "இது பற்றி போலீசிடம் சொன்னால் உன்னை கொன்று விடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளதுமான எதிரியின் செய்கைகளுக்கு இ.த.ச. பிரிவுகள் 341, 294(b), 324, 387 மற்றும் 506(ii).ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டன. எதிரி மீது வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள், அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்றுபொருள்கள் குறியீடு செய்யப்பட்டன.

**11. அரசு தரப்பு வழக்கறிஞர் வாதம்:—**

அரசு தரப்பு கற்றறிந்த உதவி அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரி மீதான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் அ.சா.1 பாதிக்கப்பட்ட நபரின் சாட்சியம் மூலமும், அ.சா.1 பாதிக்கப்பட்ட நபர் மூலமும், அ.சா.2 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி மூலமும், அ.சா.3 புலன் விசாரணை அதிகாரி சாட்சியம் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 சான்று பொருட்கள் மூலமும் எதிரியின் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கு சட்டப்படியான அதிகபட்ச தண்டனை வழங்கிட வேண்டியும் வாதிட்டார்.

**12. எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதம் :—**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 அவரது முந்தைய உரைகளுக்கு முரணாக சாட்சியமளித்துள்ளார் என்றும், அ.சா.2 மற்றும் அ.சா.3 சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சி அளித்துள்ளார்கள் என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு கொடுத்து விடுவிக்க வேண்டியும் வாதிட்டார்.

**<u>13) தீர்வு (i), (ii) மற்றும் (iii) இ.த.ச. பிரிவு 341, 294(b) மற்றும் 506(ii)– ன் கீழான குற்றச்சாட்டுகள்:–</u>**

13.1) எதிரி மீது கடந்த 12.07.2023 அன்று மாலை சுமார் 17.00 மணியளவில் அ.சா.1 கூடலூர் தேவர்சோலை சாலையில் அ.சா.1.க்கு சொந்தமான TN 43X 0621 பதிவெண்ணிட்ட ஆட்டோவில் வந்து கொண்டிருந்தபோது எதிரி அ.சா.1.ன் ஆட்டோவை சட்டவிரோதமாக வழிமறித்து நிறுத்தி ஆட்டோவின் அருகில் வந்து அ.சா.1 ஐ பார்த்து "பைசா எடுக்குடா பூரி மகனே" என்று கெட்டவார்த்தையில் திட்டியும், எதிரி அ.சா.1 ஐ பேப்பர் வெட்டும் கத்தியை காட்டி "உன் பாக்கெட்டில் இருக்கிற பணத்தை ஒழுங்கா எடுடா இல்லைனா இங்கேயே இந்த கத்தியால உன் கழுத்தை அறுத்துருவேன்" என்று மிரட்டி அ.சா.1.ன் பாக்கெட்டில் இருந்த பணம் ரூபாய் 550/–யை எடுத்தும், எதிரி அ.சா.1 ஐ பார்த்து "இது பற்றி போலீசிடம் சொன்னால் உன்னை கொன்று விடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளதுமான எதிரியின் செய்கைகளுக்கு எதிரி மீது இ.த.ச. பிரிவு 341, 294(b) மற்றும் 506(ii).ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

13.2) வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.ஆ.1 புகாரிலும், அதன் பேரிலான அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கையிலும், கு.வி.மு.ச. பிரிவு 161(3).ன் கீழான சாட்சி வாக்குமூலத்திலும் எதிரி– அ.சா.1– ஐ வழிமறித்து நின்று அ.சா.1 ஐ பார்த்து "பைசா எடுக்குடா பூரி மகனே" என அசிங்கமாக பேசியும் தொடர்ச்சியாக அசா.1 ஐ பார்த்து "உன்

பாக்கெட்டில் இருக்கிற பணத்தை ஒழுங்கா எடுடா இல்லைனா இங்கேயே இந்த கத்தியால உன் கழுத்தை அறுத்துருவேன்" என்றும் "இது பற்றி போலீசிடம் சொன்னால் உன்னை கொன்று விடுவேன்" என மிரட்டினார் என்றும் கண்டுள்ளது.

இ.த.ச பிரிவு 341.ல் உள்ள சட்டப்புறம்பாக தடுத்தல் என்பது இ.த.ச பிரிவு 339.லும் அதற்குரிய தண்டனையானது இ.த.ச பிரிவு 341.லும் கீழ்கண்டுள்ளபடி வரையறுக்கப்பட்டுள்ளது.

Section 339 of IPC: Wrongful restraint.—Whoever voluntarily obstructs any person so as to prevent that person from proceeding in any direction in which that person has a right to proceed, is said wrongfully to restrain that person.

Section 341 of IPC: Punishment for wrongful restraint. —Whoever wrongfully restrains any person shall be punished with simple imprisonment for a term which may extend to one month, or with fine which may extend to five hundred rupees, or with both.

மேற்படி இ.த.ச பிரிவு 339 மற்றும் 341 ஆகியவற்றை ஒருங்கே வாசிக்கையில் எதிரியானவர் பாதிக்கப்பட்ட நபரை எத்திசையிலும் நகர இயலாதபடி செய்திருக்க வேண்டும் என்றும் அத்தகைய செய்கையானது ஒரு மாதம் வரை சிறைதண்டனை விதிக்கத்தக்கது என்றும் கண்டுள்ளது.

இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழான குற்றத்திற்கான வரையறையானது கீழ்க்கண்டுள்ளபடி வரையறுக்கப்பட்டுள்ளது.

Section 294(b) of IPC ***<u>Obscene acts and songs:</u>***- *whoever, to the annoyance of other – . . . . . . . . . (b) sings, recites or utter any obscene songs, ballad or words, in or near any public place,*

என இ.த.ச. பிரிவு 294(b).ன் முக்கிய உட்கூறுகளானது, ஒரு நபர் பொது இடத்திலோ, அதன் அருகாமையிலோ, பிறருக்கு சச்சரவாக இருக்கும் வகையில் ஆபாசமான வார்த்தைகளோ, செய்கைகளோ, சமிக்ஞைகளோ செய்திருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

அதுபோல் இ.த.ச. பிரிவு 506(ii).ற்கான "குற்றமுறு மிரட்டலின் "(Criminal intimidation) வரையறையானது இ.த.ச. பிரிவு 503-ல் கீழ்க்கண்டுள்ளபடி வரையறுக்கப்பட்டுள்ளது.

Section 506 of IPC ***<u>Criminal intimidation</u>*****:** *Whoever threatens another with any injury to his person, reputation or property, or to the person or reputation of any one in whom that person is interested, with intent to cause alarm to that person, or to cause that person to do any act which he is not legally bound to do, or to omit to do any act which that person is legally entitled to do, as the means of avoiding the execution of such threat, commits criminal intimidation.*

Section 506(ii) of IPC. ***<u>If threat be to cause death or grievous hurt, etc :-</u>*** *And if the threat be to cause death or grievous hurt, or to cause the destruction of any property by fire, or to cause an offence punishable with death or imprisonment for life, or with imprisonment for a term which may extend to seven years, or to*

*impute, unchastity to a woman, shall be punished with imprisonment of either description for a term which may extend to seven years, or with fine, or with both.*

13.3) மேற்கண்ட இ.த.ச. 503 மற்றம் 506(ii).ன் வரையறையானது, ஒருவர் ஏற்படுத்தும் மிரட்டலானது மற்ற நபருக்கோ, அவரது நற்பெயருக்கோ, சொத்திற்கோ, அத்தகையவரின் நலன் சார்ந்தவருக்கோ செய்யப்பட்டு அதனால் பயம் ஏற்படுத்தும் எண்ணத்துடன் இருத்தல் வேண்டும் எனவும், அத்தகைய மிரட்டலானது மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிக்கக் கூடியதாக இருந்தாலோ, சொத்தினை தீ வைப்பதாகவோ, ஆயுள் தண்டனை அல்லது மரணதண்டனை விதிக்கக்கூடிய குற்றத்திற்குள்ளானதாகவோ, பெண்ணின் கற்பிற்கு தீங்கு ஏற்படுத்துவதாகவோ இருந்தால் ஏழாண்டுகள் வரை சிறை தண்டனையோ, அல்லது அபராதமோ, அல்லது இரண்டுமோ விதிக்கப்படுதல் வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

13.4) இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி தன்னை சட்டப்புறம்பாக தடுத்து நிறுத்தியதாகவோ, எந்த திசைக்கும் செல்ல இயலாதபடி அவரது இயக்கத்தை தடுத்ததாகவோ, அசிங்கமாக திட்டியதாகவோ, எதிரியின் செய்கையால் தனக்கோ அருகில் இருந்தவர்களுக்கோ சச்சரவுகளோ (annoyance) பயமோ, அச்சமோ, பதட்டமோ ஏற்பட்டதாகவோ, எதிரி தன்னை கத்தியை காட்டி மிரட்டியதாகவோ, எதிரியின் செய்கைகளால் தனக்கு பயமோ, அச்சமோ,

பதட்டமோ ஏற்பட்டதாக சாட்சியமளிக்கவில்லை. மேலும் சம்பவத்தின் கண்ணுற்ற சாட்சியான பட்டியல் சாட்சி குமார் அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1.னின் சாட்சியத்தை பரிசீலிக்கையில் அரசு தரப்பில் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 341, 294(b) மற்றும் 506(ii).ன் கீழான முக்கிய உட்கூறுகளான எதிரி அ.சா.1ஐ வழிமறித்து அவரது இயக்கத்தை தடுத்தார் என்றும், பொது இடத்தில் அசிங்கமாக திட்டினார் என்றும், எதிரி அ.சா.1ஐ அ.சா.பொ.1 கத்தியை காண்பித்து கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், போதுமான சாட்சியங்கள் அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே எதிரி – ஜிம்மி ஜோசப் மீதான இ.த.ச பிரிவு 341, 294(b) மற்றும் 506(ii).ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் போதிய சாட்சியங்களுடன் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>14) தீர்வு (iii) – இதச பிரிவு 387.ன் கீழான குற்றச்சாட்டுகள்:–</u>**

14.1) மேலும் சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரி அ.சா.1ஐ பேப்பர் வெட்டும் கத்தியை காட்டி "உன் பாக்கெட்டில் இருக்கிற பணத்தை ஒழுங்கா எடுடா இல்லைனா இங்கேயே இந்த கத்தியால உன் கழுத்தை அறுத்துருவேன்" என்று மிரட்டி அ.சா.1.ன் பாக்கெட்டில் இருந்த பணம் ரூபாய் 550/–யை எடுத்துள்ள செய்கைக்காக இ.த.ச பிரிவு 387.ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. இ.த.ச பிரிவு 387.ல் உள்ள அச்சுறுத்தி

பணம்பறித்தல் என்பது இ.த.ச பிரிவு 383 லும் கீழ்ககண்டுள்ளபடி வரையறுக்கப்பட்டுள்ளது.

383. Extortion.—Whoever intentionally puts any person in fear of any injury to that person, or to any other, and thereby dishonestly induces the person so put in fear to deliver to any person any property or valuable security, or anything signed or sealed which may be converted into a valuable security, commits “extortion”

387. Putting person in fear of death or of grievous hurt, in order to commit extortion.—Whoever, in order to the committing of extortion, puts or attempts to put any person in fear of death or of grievous hurt to that person or to any other, shall be punished with imprisonment of either description for a term which may extend to seven years, and shall also be liable to fine.

மேற்கண்ட இ.த.ச பிரிவு 383 மற்றும் 387 ஆகியவற்றை ஒருங்கே வாசிக்கையில் எதிரியானவர் பாதிக்கப்பட்ட நபருக்கு மரணமோ அல்லது கொடுங்காயமோ ஏற்படும் அளவிற்கு அவருக்கு பயம் ஏற்படுத்தி அவரிடமிருந்து மதிப்பு மிக்க பொருளை பெறுவதும் அல்லது அதற்கு முயற்சிப்பதும் போன்ற செய்கைகள் செய்திருக்க வேண்டும் என்றும், அத்தகைய செய்கையானது 7 ஆண்டுகள் நீட்டிக்கத்தக்க சிறை தண்டனை விதிக்கத்தக்க குற்றம் என்றும் கண்டுள்ளது.

14.2) இவ்வழக்கின் வழக்காணவங்கள், சாட்சிகள் மற்றும் சான்றவாணங்களை ஆராய்கையில், வழக்கின் முதல் நடவடிக்கையான

அ.சா.ஆ.1 புகாரிலும், அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கையிலும் கு.வி.மு.ச.பிரிவு 161(3)—ன் கீழான சாட்சி வாக்குமூலத்திலும் அ.சா.1 தன்னை 12.07.2023 அன்று மாலை 5.00 மணியளவில் மூன்றாம் மைல் அருகில் ஒரு நபர் வழிமறித்து நிறுத்தினார் என்றும், பேப்பர் வெட்டும் கத்தியை காட்டி பணத்தை எடுக்க மிரட்டினார் என்றும், பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்துவிட்டார் என்றும் அந்த சம்பவத்தை பட்டியல் சாட்சி குமார் என்பவர் பார்த்தார் என்றும் அரசு தரப்பு வழக்கு சங்கதிகள் உள்ளது. பாதிக்கப்பட்ட நபராக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட அ.சா.1 தனது முதல் விசாரணையின்போது தான் வைத்திருந்த ரூபாய் 550/— பணம் காணாமல் போய்விட்டது என்றும், அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், மூன்று நாட்கள் கழித்து பணம் கிடைத்து விட்டதாகவும், தனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது என்றும் சாட்சியமளித்தும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த எதிரியை அடையாளம் காட்டாமலும் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார். அரசு தரப்பில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154(2).ன் கீழ் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது அரசு தரப்பு வழக்கை ஒத்துரைக்கும் விதமாக எவ்வித சங்கதிகளும் அ.சா.1 யிடமிருந்து பெறப்படவில்லை. மேலும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.ஆ.2 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சியான அ.சா.2 அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்தபோதும் சம்பவத்தின் கண்ணுற்ற மற்றும் பாதிக்கப்பட்ட நபர் சாட்சியான அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக

சாட்சியமளித்துள்ளதால் அ.சா.2.ன் சாட்சியம் ஒத்துரைப்புடன் கூடிய சாட்சி ஆகாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே எதிரி அ.சா.1 ஐ கொடுங்காயமோ மரணமோ விளைவிக்கும் வகையில் அச்சுறுத்தி அவருடைய பணத்தை பறித்துள்ளார் எனும் குற்றச்சாட்டானது அரசு தரப்பில் போதிய சாட்சியங்களுடன் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

15) மேற்கண்ட விவாதங்கள் மற்றும் காரணங்களின் அடிப்படையில் எதிரி மீதான இதச. பிரிவு. 341, 294(b), 387 மற்றும் 506(ii) கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதிய சாட்சியங்களுடன் நிரூபிக்கப்படவில்லை என்று எதிரிக்கு சந்தேகத்தின் பலன் கிடைக்கதக்கது என்றும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**16) இறுதியாக,**

**(i) எதிரி இ.த.ச. பிரிவு 341–ன் கீழான குற்றச்சாட்டில் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும்,**

**(ii) எதிரி இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழான குற்றச்சாட்டில் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும்,**

**(iii) எதிரி இ.த.ச. பிரிவு 387–ன் கீழான குற்றச்சாட்டில் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும்,**

**(iii) எதிரி இ.த.ச. பிரிவு 506(ii)-ன் கீழான குற்றச்சாட்டில் குற்றவாளி இல்லை என தீர்மானித்தும், கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

17. இவ்வழக்கில் படிவம் 95–ன் மூலம் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட P.R.No.153/2023 என பதிவில் உள்ள இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.பொ.1 – பணம் ரூபாய் 550/–யை அதன் உரிமையாளரான திரு.நிசாத் இடைக்காலமாக பெற்று சென்றுள்ளதை அவரது வசமே வைத்துக்கொள்ள வேண்டியது என்றும், அ.சா.பொ.2 – கத்தியை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அழித்தல் வேண்டுமென்றும் மேல்முறையீடு இருப்பின் அதன் உத்தரவுபடி நடந்துகொள்ள வேண்டியது என்றும் கு.வி.மு.ச பிரிவு 452.ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023.ம் வருடம், நவம்பர் மாதம் 6.ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/– R. சசின்குமார்

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

| **வரிசை எண்.** | **சாட்சிகள் விபரம்** |
|---|---|
| அ.சா.1. | திரு. நிசாத் |
| அ.சா.2 | திரு. ராஜேஷ்குமார், கிராம நிர்வாக அலுவலர் |
| அ.சா.3 | திருமதி. உதயகுமாரி, சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| வரிசை எண். | தேதி | சான்றாவண விபரம் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.07.2023 | புகாரில் உள்ள அ.சா.1.ன் கையெழுத்து (அ.சா.1. மூலம் குறியிடப்பட்டது. ) |
| அ.சா.ஆ.2 | 03.10.2023 | சமாதான மனு (அ.சா.1 மூலம் குறியிடப்பட்டது) |
| அ.சா.ஆ.3 | 12.07.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.2.ன் கையெழுத்து (அ.சா.2 மூலம் குறியிடப்பட்டது ) |
| அ.சா.ஆ.4 | 12.07.2023 | கைப்பற்றுதல் மகஜர் (அ.சா.2 மூலம் குறியிடப்பட்டது ) |
| அ.சா.ஆ.5 | 12.07.2023 | எழுத்துமூல புகார் (அ.சா.3 மூலம் குறியிடப்பட்டது ) |
| அ.சா.ஆ.6 | 12.07.2023 | முதல் தகவல் அறிக்கை (அ.சா.3 மூலம் குறியிடப்பட்டது) |
| அ.சா.ஆ.7 | 12.07.2023 | பார்வை மகஜர் (அ.சா.3 மூலம் குறியிடப்பட்டது) |
| அ.சா.ஆ.8 | 12.07.2023 | மாதிரி வரைபடம் (அ.சா.3 மூலம் குறியிடப்பட்டது) |
| அ.சா.ஆ.9 | 12.07.2023 | ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி (அ.சா.3 மூலம் குறியிடப்பட்டது) |
| அ.சா.ஆ.10 | 12.07.2023 | படிவம் – 95 (அ.சா.3 மூலம் குறியிடப்பட்டது) |

**எதிரி தரப்பு சாட்சிகள்:–**

இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணங்கள்:–**

இல்லை

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:–**

| வரிசை எண். | சான்றுபொருள் விபரம் |
|---|---|
| அ.சா.பொ.1 | கத்தி – 1 எண்ணம் |
| அ.சா.பொ.2 | பணம் ரூபாய் 550/– |

**எதிரி தரப்பு சான்று பொருட்கள்:–**

இல்லை

**குறிப்புகள் :**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற காவலில் இருந்தார்.
2. வழக்கு விசாரணையில் எந்த சாட்சிகளும் மூன்று தினங்களுக்குமேல் நிறுத்திவைக்கப்படவில்லை.
3. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருள் அழித்தல் குறித்து உத்தரவிடப்படுகிறது.
4. வழக்கின் முடிவு காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
5. எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 437A–Judicial Form.No.75–ன் கீழ் சொந்த பிணைய பத்திரம் பெறப்பட்டது.

ஒம்/– R. சசின்குமார்

**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடலூர்.**